**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 491/2025**

**Prosecution witness : அ.சா. 5** **Date : 16.03.2026.**

| | |
|---|---|
| **Name : பாக்கியவதி** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. ) (Accused 2 absent. Petition filed and allowed)**

சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.
(சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சம்மந்தப்பட்ட காவல்துறை அதிகாரியால் அடையாளம் காட்டப்பட்டு விசாரணை செய்யப்பட்டார்)

**முதல் விசாரணை**

1) நான் இளவம்பட்டி கரட்டுகாட்டில் குடியிருந்து வீட்டிலிருந்து வருகிறேன். அ.சா.1 என் பக்கத்து காட்டை சேர்ந்தவர். அவர்கள் பொறம்போக்கு இடத்தில் வீடு கட்டி வாழ்ந்து வருகிறார்கள். அ.சா.1 சுப்பிரமணி இருவருக்கும் வீடு சம்மந்தமாக பிரச்சனை இருந்து வந்தது. 26.04.2025ம் தேதி பகல் 12.00 மணிக்கு நான் பொறம்போக்கு பக்கத்திற்கு அருகில் எங்கள் காடு உள்ளதால் அதில் நான் வேலை செய்து கொண்டிருந்த போது அ.சா.1 என்பவர் பழைய வீட்டை இடித்து மண்ணை அள்ளி கொட்டிக் கொண்டிருந்தார்கள்.

2) சுப்பிரமணி என்பவர் கெட்ட வார்த்தையால் கண்டார ஒலி தெவிடியா என்று பேசி உனக்கு எங்கு இடம் உள்ளது என்று சொல்லி பேசினார். ராணி, முருகன், செல்வராஜ் மூவரும் சம்பவயிடத்திற்கு வந்தார்கள். அனைவரும் சேர்ந்து இருந்த போது அர்சனா கையை ராணி பிடித்துக் கொண்டார். முருகன் அடுப்பு ஊதும் ஊதுகோலை எடுத்து இடது கை மீது அடித்தார்.

3) எதிரிகள் அனைவரும் ஒன்று சேர்ந்த போது ராணி ஊதுகோலை எடுத்து அ.சா.1 தலையில் அடித்தார். அந்த பெண் மட்டுமே உள்ளதால் சத்தம் கேட்டு நாங்கள் சென்று பார்த்த போது சண்டையை விலக்கிவிட்டு பிறகு

அ.சா.1 யை ஓமலூர் அரசு மருத்துவமனையில் இரு சக்கர வாகனத்தில் அவர் கணவர் அழைத்து சென்றார். எதிரிகளை பார்த்தால் என்னால் அடையாளம் சொல்ல முடியும். ஆஜரில் எதிரி ராணி உள்ளார்.என்னிடம் காட்டப்படும் வழக்கு சொத்தில் அடித்தார்களா என்றால் இதே போன்ற ஊதாங்குழலில் அடித்தார்கள். நான்கு மாதம் ஆனதால் தற்போது எனக்கு நினைவில்லை. இது சம்மந்தமாக புகார் கொடுக்கப்பட்டு போலீசார் என்னை விசாரித்தனர்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை—</u>

4) போலீசார் என்னை எங்கு வைத்து விசாரித்தனர் என்றால் சம்பவம் நடந்த இடத்தில் இரு நாட்கள் கழித்து வந்து விசாரித்தார்கள். அதன் பின்பு விசாரித்தார்களா என்றால் இல்லை. சுப்பிரமணி என்பவர் தான் கெட்ட வார்த்தையால் பேசியதாக போலீசார் விசாரணையில் சொன்னேன் என்றால் ஆமாம். முருகன் என்பவர் அ.சா.1ன் இடது கை தோள் பட்டையில் ஊதாங்கோலால் அடித்ததாக சொன்னேன் என்றால் ஆமாம்.

5) ராணி என்பவர் ஊதாங்கோலால் அர்ச்சனாவை எங்கு அடித்தார் என்றால் தலையில் அடித்தார். அவ்வாறு தான் போலீசாரிடமும் கூறினேன். முதல் விசாரணையில் சொன்னவாறு தான் போலீசார் விசாரித்த போதும் சொன்னேன். சத்தம் கேட்டு சென்றதால் சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சத்தம் கேட்டு முதலில் பேசிக் கொண்டிருந்தார்கள். சத்தம் கேட்டு தான் சம்பவயிடம் சென்றேன் என்றால் வாய்தகராறு நடந்து கொண்டிருந்தது. அவர்கள் இருவருக்குள் அடிக்கடி வாய் தகராறு ஏற்படும் என்பதால் நான் அப்போது செல்லவில்லை. வாய் தகராறு நடக்கும் போது அர்ச்சனா தேவியின் கையை ராணி பிடித்துக் கொண்டிருந்த போது தான் நான் சம்பவயிடம் சென்றேன் என்றால் சரிதான். அதற்கு முன்னர் என்ன சம்பவம் நடந்தது என்று எனக்கு நேரடியாக தெரியாது என்றால் ஆமாம். வாய் சண்டை ஏற்படடிருந்தது. நான் செல்வதற்கு முன்பாக நடந்த சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக

தெரியாது என்றால் சரிதான். சத்தம் மட்டும் தான் கேட்டது. ஆனால் நான் அடித்ததை நான் பார்த்தேன்.

6) போலீசார் சம்பவம் நடந்து இரண்டு நாட்கள் கழித்து என்னை விசாரித்த போது நான் அந்த ஊதாங்கோலை அடையாளம் காட்டினேன். அப்போது போலீசார் என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள். சரோஜா மற்றும் சிலரிடம் கையொப்பம் வாங்கினார்கள். சம்பவம் முடிந்து தகவல் கேள்விப்பட்டு வந்த அ.சா.1 ன் கணவர் அவரைஇரு சக்கர வாகனம் மூலம் ஓமலூர் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார். நான் சொல்வது போல் சொல்லும் விதத்தில் சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், அ.சா.1 என் பக்கத்து வீட்டுக்காரர் என்பதால் நான் சம்பவத்தை நேரடியாக பார்க்காமல் எதிரிகள் அ.சா.1 யை அடித்ததாக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Myilswamy Digitally signed by Myilswamy Date: 2026.03.17 11:25:09 +0530

Judicial Magistrate No.II,
Mettur.